
47 ஜன'85
மாத இதழ்
60 காசு

# சுடர்




"இந்த நாடகம் அந்த மேடையில் எத்தனை நாளம்மா?!"

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

# அலங்கார வளைவுகள்



அரசியல் தலைவர்களின் வருகையா! கட்டு அலங்கார விளைவுகள். அரசியல் கட்சித் தலைவர்களின் பிறந்த நாளா? கட்டு தெருவெல்லாம் அலங்கார விளைவுகள். இதற்கு யாராவது உத்தரவு, அங்கீகாரம் ஏதாவது உண்டா? உம். மூச்! சினிமா நட்சத்திரங்களின் விசிறிகள், கட்சி அதிகாரிகளை விஞ்சி விடுகிறார்கள். தியேட்டர் வாசல் தோறும் அலங்கார வளைவுகள்.

அப்படி அவசரக் கோலத்தில் சவுக்கை மரங்களை கசாமுசா என்று சபல்டவர் போலக் கட்டி விடுகிறார்கள். நட்ட நடுச்சாலைகளில், அஸ்திவார பலம் ஏது? தலை குப்புற சாய்ந்து வாகனங்களையும் உயிர்களையும் பலி கொள்ளுகின்றன. ஏதாவது கேள்வி முறை உண்டா? சென்னை அண்ணாசாலையில் இது நடந்தே விட்டது. படம் சொல்லுகிறதே.

FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா** ரூ 7-தான்! 12 இதழ்கள் அஞ்சலில் பெற பணவிடை செய்யுங்கள். எலலாத் தொடர்புகளுக்கும் சுட்டி 1494 அண்ணாநகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்களைப் படிக்காதவர்கள்** இப்போதும் சிலவற்றைப் பெற முடியும் இதழ் எண்கள் : 1 முதல் 12, 14, 16, 17, 19, 21, 22 24 26 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி இன்னும் இம்மாதம் வந்து சேரவில்லை** என்று சில சந்தாதாரர்கள் மௌனமாக வருந்திக் கொண்டிராமல எங்களுக்கு வராமை பற்றித் தெரிவியுங்கள். என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது இன்னும் நிற்கவில்லை. சந்தா முடிய காலமிருந்தும் 15ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப்பெறா சந்தாதாரர்கள், சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால் பெயர், முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம், வேறு வழியில்லை.

**சுட்டியை இலவசமாக அனுப்புங்கள்!** சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

# எந்த ஐயத்திற்கும் பதில்-2ரூபாயில்!

**'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் சுட்டி பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.**

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

✳ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக

✳ "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?

✳ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?

✳ வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?

✳ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

**கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம் எழுதுக : சுட்டி பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040**

FREE E- BOOKS , www.thamizham.net.,

# புற்றுநோய் - கேள்வி பதில்

புற்றுநோய் என்றால் என்ன?

உடம்பில் உள்ள ஜீவ அணுக்களின் [CELL] ராட்சத வளர்ச்சியே புற்று நோய் எனப்படும் அது உடலில் ஆறாத புண்ணில் உண்டாகலாம்; உறுத்தல் ஏற்பட்ட இடத்தில் உண்டாகலாம்; இரைப்பையில் புகைபிடித்தலால் வரும் புண் [ULCER] மீது வளரலாம்; ரத்தத்தில் உள்ள வெள்ளை சிவப்பு அணுக்கள் கும்பலாகச் சேர்ந்து மேலும் வளரலாம்.

இந்த அதிகப்படி வளர்ச்சி திடீரென உண்டாவதால் அதனை உடனடியாக அழிக்க வேண்டும், அல்லது அறுவையால் அகற்ற வேண்டும்.

செல்களின் சாதாரண வளர்ச்சிக்கும் புற்று வளர்ச்சிக்கும் வேறுபாடு உண்டா?

உண்டு. உடம்பில் கோடிக்கணக்கான செல்கள் உள்ளன. ஒழுங்கான வடிவத்தில் வளர்வதையும், புற்றுநோய் பிடித்த பின் அவற்றின் ராட்சத வளர்ச்சியையும் இரத்தத்தில் நுண்பெருக்கியால் காணலாம்.



சாதா வளர்ச்சி புற்றுவளர்ச்சி

புற்றுநோய் உண்டாகக் காரணம் என்ன?

என்ன காரணத்தால் வருகிறது என்று என்று அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் புற்றுநோய் வளரத் துணை செய்யும் (CARCINOGEN) பொருள்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். புகை குடித்தல், புகையிலை மெல்லுதல் புற்றுநோய் வளர்ச்சிக்கு எருபோல அமைந்துள்ளன.

புகையிலை மெல்லுவதால் வாயில் புற்றுநோய் வருகிறது. புகை குடிப்பதால், நுரையீரலிலும் உணவு காற்றுக் குழாய்களிலும் புற்றுநோய் வருகிறது?

(தொடரும்)

—சுட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அபிராமி பப்ளிகேஷன்ஸ்

மக்களை வாட்டும் நோய்கள் பலவற்றுள் வழி தோன்றும் வியாதிகள் முக்கியமானவை.

"பெரியம்மை, மாரியாத்தாளின் கோபத்தின் அறிகுறி. அவள் விளையாடிய முத்துக்கள் அவை. அதற்கு ஒரு மருந்துவமும் அளிக்கக் கூடாது" என்ற மூட நம்பிக்கையினூடே, அறிவு வளர்ந்து, அதைக் கட்டுப்படுத்தி விட்டோம். இவ்வாறே பிற தொத்து நோய்களையும் கட்டுப்படுத்த இயலும்.

அதற்கு முக்கியமாக வேண்டியது அவை குறித்த அடிப்படை அறிவு.

எக்கிருமிகளின் வழி இவை பரவுகின்றன?

எவ்வாறு பரவுகின்றன?

இந்நோய்களின் அறிகுறிகள் என்னென்ன?

எவ்வாறு முதலிலேயே உணர்ந்து எளிதில் குணம் காணலாம்?

எவ்வாறு இக்கிருமிகள் பரவாமலும் பிறருக்குத் தொத்தாமலும் பார்த்துக் கொள்ளலாம்?

முக்கியமான ஒவ்வொரு தொத்து நோய் குறித்தும் விளக்கம் அளிப்பது இப்புத்தகம்.

அறிவியல் (ஆங்கிலம்) வழி அமைந்த மருத்துவத்தை, தமிழில் அறிந்திட உதவுவது இந்நூல்.

தமிழில் மருத்துவ நூல்
'தொத்து நோய்கள்'

மருத்துவ மாணவர்கள் மட்டுமல்ல
அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய நூல்.
விலை : 30-00 ரூபாய் வி-பி-பி கிடையாது.

நூல் வேண்டுவோர் ரூ 31-00யை கீழ்க்கண்ட முகவரிக்கு M.O செய்க.

அபிராமி பப்ளிகேஷன்ஸ்,
307, லிங்கி செட்டி தெரு,
சென்னை — 600 001.


FREE E- BOOKS , www.thamizham.net.,



# இட்லரின் மனைவி அர்ஜென்டினாவில் வாழ்கிறார்?

இரண்டாம் உலகப் போருக்குக்காரணமாக விளங்கி உலகையே அதிர வைத்தவர் ஜெர்மானிய சர்வாதிகாரி இட்லர்.

ஜெர்மன் போரில் தோற்றதும் பெர்லினில் பூமிக்கு அடியில் கட்டப்பட்ட சுரங்க அறையில் இட்லர் தற்கொலை செய்து கொண்டார். அதுவரை திருமணம் செய்து கொள்ளாமல் இருந்த இட்லர் தன் அன்புககு பாத்திரமான ஈவா புருவான் என்ற பெண்ணை தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு திருமணம் செய்து கொண்டார்.

இட்லருடன் சேர்ந்து ஈவா புருவானும் தற்கொலை செய்து கொண்டாள். போரின் குண்டு வீச்சில் சுரங்க அறை தீப்பிடித்து எரிந்ததால் இட்லரோடு தற்கொலை செய்து கொண்ட யாருடைய சடலமும் முழுதாகக கிடைக்க வில்லை. டாக்டர் லாரி பிர்ன்ஸ் என்ற ஆராய்ச்சியாளரின் தலைமையில் இயங்கும் குழு இவ்வாறு கூறுகிறது.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி தோற்பதற்கான அறிகுறிகள் தென் பட்டதுமே நாஜிக்கள் ஜெர்மனியில் இருந்து வெளியேற ஆரம்பித்து விட்டனர்.

இவ்வாறு ஜெர்மனியில் நேச நாட்டுப் படையினரிடம் இருந்து தப்பிச் சென்றவர்கள் தென்னமெரிக்க நாடுகளில் பெயரை மாற்றித்திருமணம் செய்து கொண்டு சொத்து வாங்கி சுகமாக வாழ்ந்து வருகின்றனர்.

இட்லரின் மனைவி ஈவா புருவான் இட்லரோடு தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டார் என்று கூறப்படுவதற்கு ஆதாரம் நான்கு தங்கப்பற்கள் தான்.

ஆனால் அந்த நான்கு தங்கப்பற்களும் சுரங்க அறையில் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாக சற்று தொலைவில் இருந்த ஒரு பல் மருத்துவமனையில் தான் கண்டுபிடிக்கபட்டது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## இடுவதா? சுடுவதா?

தமிழகத்தில் சங்க காலத்தில் பிணத்தாழிகளில் இட்டுப் புதைக்கும் பழக்கம் இருந்துவந்திருக்கிறது. பிற்காலத்தில் எரிப்பது நடைமுறையில் வந்தது. கிருஸ்தவ மதம் புதைக்கும் பழக்கத்தை வலியுறுத்தியது. ஆனால் அதை மறுத்து அன்றே எரிப்பதற்குப் பலர் முன்வந்துள்ளனர் என்று தெரிகிறது. ஷெல்லி என்னும் ஆங்கிலக் கவியின் உடல் 1822இல் இத்தாலியில் அவர் விருப்பப்படி எரிக்கப்பட்டது. 1852இல் 66 சுடுகாடுகளில் 1,07,000 சவங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

புதைக்கப்பட்ட சவம் இயற்கையோடு கலப்பதற்கு 20, 30 ஆண்டுகள் பிடிக்கும். ஆனால் 1 மணி நேரத்தில் எரிக்கப்படும் சவம் சாம்பலாகி அடுத்துத் தோன்றும் ஓர் உயிரினத்திற்கு எருவாகி விடுகின்றது. சவத்தின் மீது தோன்றும் நச்சு வாயுவும் ஒட்டுண்ணி உயிர்களும் எரிக்கப்படுவதே சுகாதார முறைப்படி நல்லதாகக் கருதப்படுகின்றது.

அன்றியும் நகர மக்களின் வாழ்விடங்களுக்கே இடம் இல்லாத போது நகரங்களினிடையே பெரிய இடுகாடுகள் பராமரிக்கப் பட்டுவருவது சரியல்ல. வசதி மிக்க பெரிய இடுகாடுகளில் செல்வந்தர்களே நிறையப் பணம் கொடுத்து இடத்தை ஒதுக்கிக் கொள்ள முடிகிறது.

குறிப்பாகச் சென்னை மாநகரத்தில் விலையுயர்ந்த ஏராளமான இடத்தை ஆங்காங்கே இடுகாடுகள் அடைத்துக் கொண்டிருக்கின்றன.

இதில் மதப் பிரச்சினை அடங்கியிருப்பதால் மக்கள் நல்வாழ்வு கருதி மதத்தலைவர்கள் ஒன்று கூடி தியாக மனப்பான்மையுடன் புதிய கருத்துக்களை ஏற்பது நல்லது.

எனவே ஈவா புருவான் இறக்கவில்லை. தப்பிச் சென்று விட்டாள் என்று நம்ப வாய்ப்பு இருக்கிறது.

இப்போது அர்ஜெண்டினாவில் ஈவா புருவான் உயிரோடு இருந்தால் 60 வயதுக்கு மேல் ஆகியிருக்கும். அனேகமாக ஒரு மாட்டுப்பண்ணை உரிமையாளரின் மனைவியாக இருக்கலாம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிவராமனின் சீரணமண்டலம்




சீரணமண்டலம் என்றதும் சிவராமனுக்குத் தன் வயிறு தான் நினைவுக்கு வருகிறது. நாம் விழுங்கும் பல்வேறு உணவு பொருள்களை எல்லாம் சேர்த்துக் கலக்கி உணவுக் குழம்பாக்கி வைத்திருக்கும் கொள் இடமே வயிறு. சீரணித்தல் வாயிலேயே தொடங்கி விடுகிறது. உமிழ்நீரில் உணவுத்துண்டுகள் கலக்கும் போது அவை சர்க்கரையாகமாறிவிடுகின்றன, பின்னர் இரைப்பையில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக்அமிலம் டயாலின், பெப்சின், ரென்னின், காஸ்டிரின் போன்ற திரவங்கள் உணவிலிருக்கும் பல்வேறு பொருள்களைப் படிப் படியாக சீரணித்துத் தம் பணியை முடிக்கின்றன. சீரணித் தல் இவற்றால் மட்டும் முடிந்துவிடுவதில்லை, இந்த சீரணித் தலுக்கும் உடம்பிலிருக்கும் பல்லாயிரம் மீட்டர் நீளமுள்ள நரம்புமண்டலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

பொதுவாகக் கவலை முதலிய உணர்ச்சிகள் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்றன. தூண்டப்பட்ட நரம்பு மண்டலம் வழக்கம்போல, இரைப்பைக்குப் போகும் இரத்தத்தைக் கூட நிறுத்திவிட்டு அட்ரேனல் சுரப்பியைத்தூண்டி அட்ரேனலினைச் சுரக்கச்செய்கிறது. அட்ரேனலின் உடலுக்கு ஓட்டம் பிடித்தல் முதலியவற்றிற்கான திடீர்சக்தியைக் கொடுப்பது. சிவராமன் இப்போது 60 வயது தாண்டிவிட்டார். அவரால் ஓடியாட முடியாது. இதன் காரணமாக பயன்படுத்தப்படாத பல்வேறு திரவங்கள் வயிற்றில் தேங்கி வலியை ஏற்படுத்து கின்றன. அதனால் தான் ஒருஉடற்பயிற்சியும் செய்ய முடியாத போது சிவராமனை நடத்தல் பயிற்சியாவது மேற் கொள்ளுங்கள் என்று மருத்துவர் கூறுகிறார். பெரும் பாலன சீரணம் நடைபெறும் இரைப்பையில் புகைபிடித்தல்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

சூடு பானங்கள் குடித்தல், கவலைப்படுதல் ஆகியவற்றால் முதலில் அல்சரும் பின்னர் கான்சரும் வருகின்றன. இரைப்பையும் அதனை பாதிக்கும் நரம்புமண்டலமும் நல்ல நிலையில் இருக்கவேண்டுமானால் பிராணாயாமம் சர்வாங்காசனம், தனுராசனம் முதலியவற்றை முறைப்படி செய்தல் வேண்டும் இந்த 60 வயதிலும் சிவராமன் யோகாசனம் தொடங்கி இருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

அடுத்து : இராமசாமியின் இரத்த மண்டலம்.

—சுட்டி பாரதி

# தமிழ்-அச்சுப் பேழைகளில்...

தமிழ் அச்சுக் கோர்க்கும் அச்சக எழுத்துப் பேழைகளில் தற்போது ஏறத்தாழ 199 அறைகள் உள்ளன. இதன் காரணமாக தமிழ் அச்சுக் கோர்ப்பு இடர்ப்பாடுடையதாக இருக்கின்றது. ஏற்கனவே ஐகாரத்தில் பெரியார் சில மாறுதல்களை அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து தமிழக அரசு, கால் போடும் நெடில் எழுத்து முறையில் சில மாறுதல்களை கொணர்ந்தது. இவையெல்லாம் முழுமையான எழுத்துச் சீர்மையாக மாட்டா.

இந்நிலையில் சுட்டி பாரதியின் எழுத்துச் சீர்திருத்தம் சுட்டியின் பழைய இதழிலே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆங்கிலம் .26 எழுத்துக்களே கொண்டுள்ளது என்று பெருமையாகப் பேசுவார்கள். இங்கே காணுங்கள்; தமிழுக்கு இருபத்தைந்தே எழுத்துக்கள். அச்சகப் பேழையில் குறியீடுகளும் சேர்த்து 52 போதுமானவை. சில விதிமுறைகள் ,

1. புதிய எழுத்து முறையில் உயிர்நெடில் கிடையாது. இருகுறில் நெடிலாகிறது.
2. ஔ கிடையாது.
3. மெய்யெழுத்துக்குப் புள்ளி கிடையாது.
4. உயிர்மெய் வடிவம் தனியே கிடையாது. ஆங்கிலம் போல மெய்யும், உயிரும் சேர்த்து எழுதப்படும்.
5. வழக்கில் இருக்கும் பிற மொழி எழுத்துக்கள் அப்படியே இடம் பெறுகின்றன.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# புதிய அச்சுப் பேழை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | { } [ ] | ' | 6 | ஸ்ரீ |
| .: | ஞ | ள | வ | ஐ | 2 | 7 | ஹ |
| க்ஷ | ங | ல | ம | ஒ | 3 | 8 | ஜீ |
| ஜ | ழ | ர | ப | எ | 4 | 9 | ஷை |
| ல | ண | ட | ந் | உ | 5 | 0 | ? ! |
| ஷ | ன | ச | த | இ | . , ' | : ; | " - " — |
| ஐ | ற | ய | க | அ | ஸ்பேஸ் | ½ 1 | ஃவாட் |

## ஐந்து வருடம் →

அரசியல்வாதிகள்—
ஐந்து விரல்களை
அமுக்கிப் பிடித்து
கைகுலுக்கியபடியே
ஓட்டுக்கேட்டதும்
புரிந்துவிட்டது.,
"— ஐந்து வருடம்
எங்கள் வாழ்வு
அவர்களின் கைக்குள்!"

-பழ. சந்திரசேகரன்

## ஒரு கேள்வி

துப்பாக்கி சத்தம்
இந்தியாவின்
தேசிய கீதமாக
எப்போது மாற்றப்பட்டது..?

-வலங்கை தமிழ்வேந்தன்


உடலும், மனமும் வலிமை பெற:-
கவிஞர் வேதம் எழுதிய
**எளிய யோகாசன முறைகள்**
(படங்கள், அட்டவணையுடன்)
விலை ரூ. 13-00. தபால் செலவு தனி V.P.P.யில் பெற எழுதுக.
விபரங்களுக்கு
**புத்தகப் பூங்கா**
29, நல்லண்ண முதலி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.


FREE E- BOOKS , www.thamizham.net.,

## என்ன ஆயிற்று? ? ?

● பேசின் பிரிட்ஜ் பக்கத்தில் பல கேடிகளை விழுங்கியும் எலும்புக்கூடுகளாய் இளைத்து நிற்கும் மின்வாரியக் கட்டடங்கள் ஏன், பாதியில் பல வருஷங்களாக நிற்கின்றன?

● அம்பத்தூர் பால் பண்ணையில் உபயோகித்து எறியப்பட்ட பல லட்சக் கணக்கான — அந்நிய நாட்டு பட்டர் ஆயில் காலிடின்கள் இப்படியா அலங்கோலமாகக் குவிந்து கிடப்பது? அவ்வப்போது அப்புறப்படுத்தினால் என்ன?

● மோட்டார் சைகிள், ஸ்கூட்டரில் போகிறவர்கள் தலைக் கவசம் அணிய வேண்டும் என்ற முடிவை அரசு மாற்றிக் கொண்டு விட்டதா? ஏன் அமல்படுத்தவில்லை. எந்த உற்பத்தியாளருக்காகக் காத்திருக்கிறது?

● கோயம்பேடு கொத்தவாலாக ஆவது எப்போது? கிளி ஜோஸ்யம் பார்க்க வேண்டியது தானா?

● நகரத்தில் நரிக்குறவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு எழுதியிருக்கிறோமே! (காண்க சுட்டி எண் 5) அதை அரசு படித்துப் பார்க்குமா?

● தமிழ்க் கல்லூரிகளில் தமிழையே சிறப்பாக எடுத்துப் படிக்கும் புலவர்களுக்குத் தமிழில் பட்டம் கொடுப்பது இல்லையாமே! ஆங்கிலத்தில் பி. லிட் என்று பட்டம் கட்டுகிறார்களாமே! அவர்களும் பேசாமல் வாங்கிக் கொள்கிறார்களாம்; ஆகா என்னே! தமிழ்ப் பற்று!!!

### அவமானச் சின்னங்கள்

நகரத்து சுவர்கள்
வெள்ளையடிக்கப்பட்டிருந்தன.

ஆஹா!...வியந்தேன்.
சற்று நேரத்தில்—
அரசியல் கட்சிகளின்
சின்னங்களை ஏற்று
அலங்கோலமாகிய அந்தச்
சுவர்கள்—நாட்டின்
அவமானச் சின்னங்களாயின.

-மேல்நாட்டான்

### சிலைகள்

பாஸ் போர்ட்
விசா—

இல்லாமல்
வெளி நாடு செல்லும்
உலகம் சுற்றும்
வாலிபர்கள்

வெ. திருமகள்

FREE E- BOOKS , www.thamizham.net.,



# திரையுலகப் பிரமுகர்கள்:

## இயக்குநர் கே. பாலசந்தர்

## 6

### பெண்களும் பெண்மையும்

தமிழ்த்திரையுலகின் அரை நூற்றாண்டு காலத்தில் பெண்கள் சம்பந்தமான படங்கள் நிறையவே வந்துள்ளன. ஆனால் அவைகளில் பெரும்பாலனவை பழமையை பெருமை படுத்தியோ-பத்தாம் பசலித்தனத்தை நியாயப்படுத்தியோ தான் வந்துள்ளன. பெண்மையை மேம்படுத்தும் படங்கள் நம்நாட்டில்-குறிப்பாக தமிழில் மிகவும் குறைவு. பாலசந்தர் படங்களில் பாதிக்கு மேற்பட்டவை பெண்களின் பிரச்சனை களை மட்டும் அல்ல பெண்மை என்கிற மென்மையான அம்சத்தைப் பற்றியும் அலசுபவை.

பாலசந்தரின் பெண்கள் பலவகையானவர்கள். இவர்களில் ஒரு சிலர் வாழ்க்கை எவ்வாறு தமக்கு விதிக்கப் பட்டதோ அவ்வாறே வாழ விரும்புவர்கள். சொந்த காலிலே யே நின்று வாழ முயன்றவர்கள். இதில் வென்றவர்களும் உண்டு. தோற்றவர்களும் உண்டு. சமுதாய அமைப்பின் சீர் கேடுகளால் பாதிக்கப்பட்டு அதிலேயே சங்கமமானவர் கள். அதை எதிர்த்துப் போராட முயன்று தோற்றுப் போனவர்கள். ஒருத்திக்கு ஒருவன் என்ற பாரம்பரியத்து டன் வாழ ஆசைப்பட்டவர்கள். அப்படி வாழ முடியாத சூழ்நிலை வந்தபோது ஊசலாடியவர்கள். வாய்த்த ஒருவனும் வக்கரிப்பானவன் என்பதால் அந்த ஒருவனையும் இழக்கத் துணிந்தவர்கள் ஏன் கொல்லவும் தயங்காதவர்கள் என்று பெண்மையின் பல்வேறு பரிணாமங்களை விளக்கிக் காட்டிய வர்கள். காதலித்து மணந்த கணவன் கைவிட்டு விட்டு விட்டதால் அவனையே மிஞ்சி நிற்க சபதம் கொண்டு அவனுக்கே மேலதிகாரியாக-மாவட்ட கலெக்டராக உயரும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இருகோடுகள். கணவன் கைவிட்டு விட்டதற்கான காரணம் என்ன என்பதை அறிய முயன்று-அக்காரணம் சரியானதாக இல்லாமல் போகும் பட்சத்தில் அவனைத் தூக்கியெறிந்து விட்டு மனசாட்சியுள்ள வாழ்க்கையை வரித்துக் கொள்ள வேண்டிய ஒரு பெண் அந்தக் கணவனையே தொடர்ந்து சென்று அவன் உணர்வுகளோடு தன் உணர்வுகளையும் சேர்த்து நோகவைத்துக் கொள்வதால் என்ன தான் பயன்? குடிகாரக் கணவன். சொந்த நலனுக்காக மனைவியையே அடுத்தவனுக்குப் படைக்க முயலும் மாபாதகன்- இவனிடமிருந்து விடுபட்டு சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும், புகழ்பெற்ற நடனமணியாக விளங்குகிறாள் காவியத் தலைவியின் கதாநாயகி, கணவன் கயவன் என்பதால் சுட்டுக்கொல்லும் திண்மை பெற்ற இத்தலைவி. அடுத்த கட்டத்திற்குப் போகாமல் நின்று போகிறாள். எந்த நிலையிலும் அவளை ஏற்கத் தயாராக இருக்கும் தன் காதலனை வெறும் நண்பனாகவே பாவிக்கிறாள். அவனது காதலை ஏற்கக் கூடிய துணிவு இவளிடம் முழுமையாக பரிணமிக்கவில்லை. திரையில் வந்த தப்புத்தாளங்கள் சமுதாயத்தை பொறுத்தவரை சரியான தாளங்களே! மக்கள் பகுதியினரால் ஒதுக்கப்பட்ட சட்டத்தாலும் சமுதாயத்தாலும் வெறுக்கப்பட்ட தனிப்பட்ட சில கிரிமினல்கள் திருத்த முனைகிறார்கள். கெட்டுப்போன ஒரு கழிசடைப் பிறவியால் காதலிக்கவும், கல்யாணத்திற்கு தயாராகவும் முடிகிறது. ஆனால் இவர்களது வாழ்க்கையை இவர்களாலேயே தீர்மானித்துக் கொள்ள இயலாமல் போய்விடுகிறது. பழைய குற்றவியல் பாதைக்கே இவர்களை பாலசந்தர் அனுப்பி வைத்து விடுகிறார். கெடுவதற்கு அனுமதிக்கிற சமுதாயம், திருந்துவதற்கு மட்டும் அனுமதிப்பதில்லையே ஏன் என்ற கேள்வி நம் முன் சரியாகவே எழுகிறது.

இயல்பான சூழ்நிலையின் காரணமாக மணமானவன் மனதால் விரும்பி உடலாலும் அர்பணித்து-அவன் குழந்தைக்கு தாய்ாகவும் ஆகிற 'நூல்வேலி' நாயகி அவனை விட்டு விலகித்தனித்து வாழ்வது மட்டுமல்ல. அந்த நிலையிலும் தன்னை ஏற்க தயாராக இருக்கும் நல்லெண்ண இளைஞனை நிராகரித்து விடுகிறாள். அவளை அதோடு

FREE E- BOOKS , www.thamizham.net.,

மட்டும் விடுவதில்லை பாலசந்தர். மாடியிலிருந்து விழச் சொல்லி மாய்த்துக் கொள்ளவும் செய்கிறார்! பெண்மையின் பழமைக்கு புதிய மெருகு பூசப்பட்ட பிற்போக்கான உள்ளடக்கம் கொண்ட படம் இது!

ஆக பாலசந்தரின் பெரும்பாலான கதாநாயகிகள் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற சந்தனச் சருகுகளை தீயிட்டுக் கொளுத்தக் கூடிய திண்மை படைத்தவர்களே. ஆனால் அடுத்தக் கட்டத்திற்குப் போக பெரிதும் அஞ்சக் கூடியவர்கள். பழைமையிலிருந்து விடுபட்டாலும் புதுமைக்குள் பிரவேசிக்கத் தயங்குகிற நடுத்தர வர்க்கத்து வாசலாடிகள்! ஒன்று பைத்தியமாகி விடுகிறாள் அல்லது தனிமைப்பட்டு போகிறாள். கடைசியில் தற்கொலையும் செய்து கொள்கிறாள். இதற்கு என்ன காரணம்? ஒருவனுக்கு ஒருத்தி என்ற இலக்கணத்தின் படி வாழ்வது. அந்த ஒருவன் சரியில்லாமல் போனால் அவனை கொன்று கூட புதைத்து விடலாம் ஆனால் அதே நேரத்தில் எந்த காரணத்தைக் கொண்டும் இன்னொருவனுக்கு மட்டும் வாழ்க்கைப்படக் கூடாது என்ற எண்ணமே காரணமாக இருக்கலாம். கிணற்றைத் தாண்டலாம்.ஆனால் முழுமையாக அல்ல என்ற மாதிரி. ஆயினும் நிழல் நிஜமாகிறது என்ற படம் முழு கிணற்றையும் தாண்ட முயன்ற படம் எனறே கூறலாம் உண்மையிலேயே சரியான முடிவை மேற்கொண்ட இப்புதுமைப் படம் நடைமுறை ரீதியில் தோல்விப் படமாக அமைந்து விட்டது வருந்தற்குரியதே.

—டி. எஸ். ரவீந்திர தாஸ்


கோமல் சுவாமிநாதன் ●

★ ஒர் இந்தியக் கனவு - 6.00 ★ செக்கு மாடுகள் - 6.00

டி. எஸ். ரவீந்திரதாஸ் ●

★ சிறகு முளைக்காத ஒரு பறவை - 7.50 ★ ஆன்ம ஓவியம் - 11.00

மயிலை நாதன் ●

★ எரிகின்ற இலங்கையில் எழுகின்ற ஈழம் - 8.00

★ பெரியார் ஒரு நடைச் சித்திரம் - 11.00

மயிலவன் பதிப்பகம் 7, எம். கே. அம்மன் கோயில் தெரு. சென்னை — 600004.


FREE E- BOOKS , www.thamizham.net.,

# சிறுகதை: நிஜங்கள்

"சார் உங்களை ஹெட் மாஸ்டர் கூப்பிடறாரு"— வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் சண்முகம். பியூன் வந்து அழைக்கவும் புறப்பட்டுப் போனார்.

அறைக்குள் ஹெட் மாஸ்டர் உர்ர் என்று காணப் பட்டார். முகத்தில் மிளகாய் பழுப்பது போல் ஒரு தோற்றம்.

"குட்மார்னிங் சார்!" சண்முகம் குரலோடு உள்ளே நுழையவும் அந்த தோற்றம் மேலும் வதங்கியது.

"மிஸ்டர் சண்முகம்! நீங்களாவது இந்த தடவை எக்ஸாம் சூப்பர்வைசனுக்கு ஒத்துக்குவீங்களா!"

சண்முகத்திடம் மௌனம்!

"நம்ப ஸ்கூல்ல இருந்து ஒருத்தரை சூப்பர்வைசனுக்கு அனுப்பச் சொல்லி கமிஷனர் கிட்ட இருந்து ஆர்டர். யாரைக் கேட்டாலும் எனக்கு வேண்டாம் உனக்கு வேண்டாம்னு ஒதுக்கறாங்க. மிஞ்சியிருக்கிறது நீங்க தான். நீங்களாவது... "ஓ. கே. சார்!" பட்டென்று பதில் வந்தது சண்முகத்திடம். ஹெட் மாஸ்டர் முகம் பூவாணமாகி விட்டது

வெளியே வந்தார் சண்முகம்

"என்னய்யா மாட்டுனீரா? அங்க கண்டிப்பால்லாம் இருக்க முடியாது தாளிச்சுபுடுவாங்க பசங்க..."

"நாங்க என்ன விவரமில்லாமலா மாட்டேன்னோம்? பரீட்சை எழுதறது மாணவர்கள் தான். ஆனா அதுல சில பேட்டை ரவுடிகளும் உண்டு. போன தடவை ஒருத்தன் 'பிட்' அடிக்கப் போய், அவனை நான் பிடிக்கப் போய் என் மூட்டு எலும்பு முறிஞ்ச கதை தான் உனக்கு தெரியுமே..."

—வாத்தியாருக்கு வாத்தியார் தங்கள் புலம்பல் பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்தனர்.

"என்ன நடந்தாலும் சரி. இந்த தடவையாவது பயமின்றி, கடமையை ஒழுங்காக செய்து விட வேண்டும். இந்த வாய்ப்பையும் விட்டு விட்டால் அப்புறம் மனசாட்சிக்கு பதில் சொல்ல முடியாது..."

FREE E- BOOKS , www.thamizham.net.,

தேர்வு எழுதும் இடத்தில் ஒரு கழுகைப் போல் செயல்படத் தொடங்கினார் சண்முகம்.

சில மாணவர்கள் முறைத்துப் பார்த்தனர்.

'கண்டுக்காதய்யா...' என்று கண்ணாலேயே சொல்லி பார்த்தனர். பல்லை நறநறத்துக் காட்டி 'பிச்சுப்பிடுவோம்' என்றனர்.

ஒரு வழியாக தேர்வுகள் முடிந்து விட்டன.

சண்முகத்திற்கு சந்தோஷம் பிடிபடவில்லை.

வெளியே வந்தார். சைக்கிள் டயர் கிழிக்கப்பட்டிருந்தது!

எதிர்பார்த்தது தானே? ஒரு பத்து பேர் தூரத்தில் கூட்டமாக நின்று கொண்டு விசில் அடித்து கலாட்டா செய்யப் பார்த்தனர். உறக்கக் கத்தினார்கள்.

நடந்தே வீடு வந்து சேர்ந்தார். மனைவி ஆதுரலத்துடன் கேட்டாள்.

''என்னங்க இது? —எப்படி இந்த பசங்களுக்கு நடுவே காலம் தள்ளப் போறீங்க...''

''காலம் இருந்தால்ல தள்ள?'' —வருத்தத்துடன் சண்முகம் கேட்ட கேள்வி புரியாமல் அவரைப் பார்த்தாள் அவர் மனைவி.

'அடுத்த வாரம் எனக்கு ரிடையர்மெண்ட்!'' என்றவரின் விழியில் நீர் தேங்கியிருந்தது. சில தியாகங்களுக்கு தயார் ஆகாத நிலையில் சில நீதிகளை நிலை நாட்டுதல் சாத்யமில்லை என்பது புரிந்திருந்தது.

—இந்திரா சௌந்தர்ராஜன்


உதயம், புதுவழிகள் என்கிற இரண்டு இதழ்களின் இணைப்பில்... முகவரி மாத இதழ்

ஜனவரி முதல் வெளிவருகிறது!

சிறப்பாசிரியர்: நா. தென்னிலவன். ஆசிரியர்: நவயுகன் சந்தா, விளம்பர தொடர்புக்கு:-
38. A. பாலுத் தெரு, கும்பகோணம் - 612 001. (கழிவு 30%)
ஆண்டுச் சந்தா ரூ 12/- தனி இதழ் ரூ. 1/- தமிழகமெங்கும் ஏஜெண்டுகள் தேவை.


FREE E- BOOKS , www.thamizham.net.,

பச்சௌரி செளரா நிகழ்ச்சிக்குப் பின், காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்திவிட்ட செயல்,
புரட்சியின் முதல் மின்னலைக் கண்டே பின்வங்கிவிட்ட" M.B, The Mahatma - A
செயலாகத்தான், தீவிரவாதி இளைஞர்கள் இரண்டு முடிவுக்கு வந்தார்கள். ஒன்று, இனிமேல் காங்கிரஸ் இயக்கத்தை நம்பிப் பலனில்லை என்பது! இன்னொன்று, தனி நபர் பயங்கரவாதத்தை விட்டொழித்து, அனைவரும் ஒரியக்கமாகச் சேர்ந்து செயல்படுவதென்பது!

மேற்கண்ட முடிவுப்படி, டாக்டர் கத்ளபால் யோசனையை ஏற்று, ஏறத்தாழ முப்பது இளைஞர்களால், 1926 ஆம் ஆண்டு மார்ச் மாதம் "நவஜவான் பாரத் சபா" என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராகத்தான் இந்திய அரசியல் வானில், பகத்சிங் முதன்முதலாக அறிமுகமானவர். இதற்கும் முன்பே, பகத்சிங்கிற்கு, புரட்சி இயக்கங்களோடு தொடர்பு இருந்ததெனினும், இவ்வியக்கமே, அவரையும், தீவிரவாதப் போக்கையும் வலுப்படுத்தியது! பகவதி சரண்வோரா தன்வந்திரி ஆகியோரும், இவ்வியக்கத்தின் முக்கியப் பொறுப்பாளர்கள் ஆவர்!

இவ்வியக்கத்தின் சார்பில், மக்களுக்கு உணர்ச்சியூட்டும் வகையில், பல கூட்டங்கள் நடத்தப்பெற்றன. 28-03-1928 அன்று நடைபெற்ற கூட்டத்தில், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் பார்ட்டியைச் சேர்ந்த சேர்ந்த பிலிப் ஸ்பிராட் (Philip Spraty) என்பவரும், எஸ்.ஏ. 'டாங்கேயும் பேசியதாக அரசாங்கக் குறிப்புக்கள் கூறுகின்றன. (NAI-Home Depot. Poll. F.No. 130/1930 & K.W.-P.37).

1815 ஆம் ஆண்டில், லாகூர் சதி வழக்கில் தூக்குமேடை ஏறிய கர்தார் சிங்கின் முதலாண்டு நினைவு விழாவை பகிரங்கமாகக் கொண்டாட வேண்டும் என்று, இயக்கத்தின்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பொதுச் செயலாளர் பகத்சிங் கொண்டு வந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, லாகூரில் சிறப்பாக விழா எடுக்கப் பட்டது! லாகூர் 'பிராட்லா' மண்டபத்தில், கர்த்தார் சிங்கின் படமும் திறந்து வைக்கப்பட்டது!

இந்த நிகழ்ச்சிக்குப் பின்புதான், ஆங்கிலேயரின் கழுகுக் கண்கள், இந்த சபாவையும், பகத்சிங் முதலான இவ்வமைப் பின் பொறுப்பாளர்களையும் வட்டமிடத் தொடங்கின.

மேலும், இந்த சபாவின் உறுப்பினர் அட்டையில் சபா வின் நோக்கங்களாக கூறப்பட்டுள்ளவை, இன்னொரு புதிய செய்தியையும் நமக்கு உணர்த்துகின்றன.

இந்தியா சுதந்திரமடைய வேண்டும் என்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், அதற்கு மேலும் சில கொள்கைகளை இந்த சபா கொண்டிருந்தது. கொள்கையும், குறிக்கோளும் (aims and objects) என்ற பகுதியில் முதலாவதாக இடம் பெற்றுள்ள வரிகள் :-

"to establish a complete independent republic of the labourers and peasants of the whole of India."

என்பதாகும்!

(தொடரும்) — க.ப. வீரபாண்டியன்




காது கேட்கச் செய்வது எமது பணி

வெளியே தெரியாமல் அணிந்து கொள்ளக்கூடிய ஆர்பி (ARPHI) ஹியரிங் எய்டுகள் மூலம் உங்களுக்கு நன்றாகக் காது கேட்கச் செய்ய எங்களால் முடியும். எல்லாவித ஹியரிங் எய்டுகளுக்கும் நாங்கள் 'சர்வீஸ்' செய்து தருகிறோம். விற்பனையும், சர்வீஸும் உத்திரவாதமானவை

இயர் எய்ட்ஸ்

4, வடக்கு உஸ்மான் ரோடு,
கோடம்பாக்கம் ஓவர்பிரிட்ஜ் ஜங்ஷன் அருகில், சென்னை-600 017
போன் : 440361


## இன்றைய அணுகுண்டு

1945ஆம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பான் நகரங்களின் மேல் அமெரிக்கா வீசிய அணுகுண்டினால் 3 நிமிடங்களில் ஒரு இலட்சம் பேர் இறந்தனர்.

இன்று உலகில் உள்ள மொத்த அணுகுண்டுகளின் சக்தி ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுக்குண்டை போல 10 இலட்சம் மடங்கு ஆகும்.

ஸ்டாக்ஹோமில் உள்ள சர்வதேச அமைதிக் கழகம் இத்தகவலைத் தந்துள்ளது.

FREE E- BOOKS , www.thamizham.net.,




## புத்தகம் பிழிவு

ஆசிரியர்:
**N.V.R. RAM**

விலை ரூ.24/-

வெளியீடு:
**VIKAS PUBLISHING HOUSE PVT LTD.**

# அதிகார வர்க்கத்தினரின் விளையாட்டு
# GAMES BUREAUCRATS PLAY

1. அதிகார வர்க்கம் என்பது காலம் காலமாகத் தொடர்ந்து இருந்துவரும் பழையதோர் நிறுவன அமைப்பு முறையாகும்.

2. இந்தியாவின் அதிகார வர்க்கமானது தனது செயல் முறைக்காக ஒரு புது விதமான விசித்திரமான -எழுதப்படாத சொல்லகராதியை உருவாக்கி உள்ளது. இந்த அகராதியை நீங்கள் புரிந்துகொண்டால் தான் அதிகார வர்க்கத்தின் மெத்தனமான செயல்முறையினைப் புரிந்துகொள்ள முடியும்.

உதாரணத்திற்கு இரண்டு.

(அ) "கடிதம் பரிசீலனையில் உள்ளது" என்று உங்களுக்கு பதில் கிடைத்தால் உங்களது கடிதம் ஏதோ ஒரு கோப்பில் சேர்க்கப்பட்டு கிடப்பில் வைக்கப்பட்டுள்ளது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

(ஆ) ஒரு கோப்பில் உயர் அலுவலர் ஒருவர் "பேசுக" என்று எழுதினால் "எனக்கு புரிகிறபடி அல்லது நான் என்ன உத்திரவிட விரும்புகிறேனோ அதற்கு தகுந்த வகையில் எழுதிக்கொண்டு வா". என்று பொருள். அதாவது இதன் உட்பொருள்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

"பழையதை மாற்றி புதியதாக எதையும் செய்து விடாதே" என்பதாகும்.

3. அதிகார வர்க்கம் (அ) எதையும் நீயாக முடிவெடுத்து (முன்னுதாரணம் இன்றி) முதலில் செய்யாதே; (ஆ) வேலையை மணிக் கணக்கில் வளர்க்கக் கற்றுக் கொள். ஆனால் உருப்படியான முடிவுகள் எதையும் எடுத்து விடாதே; (இ) எந்த ஒரு செயல்பாட்டிற்கும் பொறுப்பேற்றுக் கொள்வதை தவிர்க்கவும்; (ஈ) உபயோகமில்லாத விஷயங்களை பெரிதுபடுத்தி உனது புகழை வளர்த்துக்கொள் என்கிற விதிகளின் அடிப்படையில் செயல்படுகிறது.

4. புதிதாக முடிவுகள் எடுத்துச் செயல்பட வேண்டிய மற்ற பணிகளை தள்ளிப் போடுதலும், புதிய திட்டங்களுக்கான முடிவுகளை கமிட்டிகளின் வாயிலாக உருவாக்குவதினால் பொறுப்பிலிருந்து நழுவிக்கொள்ளுதலும் ஆகிய பொறுப்பற்ற தன்மையினை கொள்கையாகக் கொண்டே அதிகார வர்க்கம் இயங்குகிறது.

5. அறிக்கைகள் என்ற பெயரில் பல நூறு பக்கங்களடங்கிய குப்பைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த குழுக்கள் சொல்லும் சில உருப்படியான யோசனைகளை அரசு ஏற்றுக் கொள்வதில்லை. மக்களுக்கு எவ்வித பலனும் இல்லாத இவ்வகை பணிகளுக்கான செலவினங்கள் ஆண்டு ஒன்றிற்கு 16.7 சதவீதம் உயர்ந்துகொண்டே செல்கிறது.


மொத்தத்தில் அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகள் தனது சுய வளர்ச்சியில் மட்டும் அக்கறையுடையதாகவும், பொதுமக்களின் நலன் வளர்ச்சிக்கா எவ்விதத்திலும் உதவாத விளையாட்டுப் போக்கினதாகவும் அமைந்துள்ளது.

—துரை - மோகன்

## கட்சி மரங்களும் ஊழல் வேர்களும்

மண்ணுக்கு வெளியில்தான்
எங்களுக்குள் வேறுபாடுகள்
வேர்களுக்குள் விரோதமே
யில்லை!

-சந்திரதாசன்



FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது தாமரை மருத்துவம்

தாமரையில் வெண்தாமரை, செந்தாமரை, ஆகாயத் தாமரை, கல்தாமரை எனப் பலவகை உண்டு. இதில் வெண்தாமரைப் பூவே மிகுந்த மருத்துவ குணமுடையதாகும்.

✷ உடல் வெப்பத்தினால் ஏற்படும் கோளாறுகளைத் தணிப்பதே இதன் தனித்தன்மை.

✷ உஷ்ணத்தினால் கண் சிவக்கிறதா? கண்ணீர் வடிகிறதா? தாமரைப்பூவைப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி இறக்கி, அந்த ஆவியை விழிகளைத் திறந்து கொண்டு பிடிக்கவும். கண் தெளிவடையும்.

✷ அஜீரணத்தால் ஏற்படும் பேதி, ஈரல் நோய், சீதபேதி, போன்ற வயிற்று நோய்களுக்குப் பூவின் சாறு குணமளிக்கும்.

✷ கர்ப்பிணிகளுக்குத் தாமரைப்பூ மிகவும் நல்லது. 8-வது மாதத்தில் பசி மந்தம் ஏற்படும் போது தாமரைப்பூவுடன் நெய்தற்கிழங்கையும் சேர்த்து அரைத்து பசும்பாலில் கலந்து கொடுத்தால் 'கப' 'கப'வென்று பசி எடுக்கும்.

✷ தாமரைப்பூவிற்கு மூளையைச் சுறுசுறுப்பாக்கும் ஆற்றலுண்டு. இதனைக் கஷாயமாக்கி சாப்பிட்டு வந்தால் மூளை பலப்படும்; அறிவு பிரகாசமடையும் அத்துடன் நரை திரை மாறும்.

✷ 106 டிகிரி காய்ச்சல் வந்து மூளை சிதறிப் போய், அனல் வீசும் நிலையா? தயங்காமல் தாமரைப்பூ கஷாயம் கொடுங்கள். கொஞ்ச நேரத்தில் நன்றாக வியர்த்து, சுரம் இறங்கும்.

✷ தாமரைப்பூ கஷாயத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் இரத்தக்கொதிப்பு நோய் அடங்கும். இந்நிலையில் உணவில் அரை உப்புத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும்

✷ இந்நாரின் பஞ்சினால் திரிசெய்து ஏற்றப்படும் விளக்கைப் பார்ப்பவர்களுக்குக் கண்பார்வை குளிர்ச்சி பெறும் ஆனால் அவ்விலக்கு பசுநெய் அல்லது இலுப்ப நெய்யைக் கொண்டோ தான் ஏற்றப்பட வேண்டும்

[அடுத்து : நமது மஞ்சள் மருத்துவம்]

—சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## எமக்கு வந்தவை

**வேலை கொடுக்கணும் மூளைகள் ;** (குழந்தைக் கவிதை) (2.50)
மா. காசியப்பு. M/s கீலன் பதிப்பகம், ஆனாசாலை,
திருப்பத்தூர் ரோடு, தேவகோட்டை 623 302.

**கவிதை அரங்கேறும் நேரம் :** (7-00)
குருவிக்கரம்பை சண்முகம். M/s பாண்டியன் பதிப்பகம்,
17, 3-வது குறுக்குத் தெரு (கிழக்கு), செனாய் நகர்,
சென்னை-600 030

**வாணி தமிழ், இந்தி கபோதினி :** (12.00)
ரா. விழிநாதன், M/s வாணி புக் டிப்போ, 59, ஆதியப்ப நாயக்கன் தெரு
சென்னை-600 079.

**ஐசுவரியம் என்னும் குடிசை கைத்தொழில் :**
(12.00) M/s வாணி புக் டிப்போ,

**இனி சோகமில்லை :** (கவிதைத் தொகுப்பு) (1.30) பேராசிரியர்
ஜி. வில்சன் அமல்ராஜ், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்,
வ. ஆ. மா

**அக்கினிக் கணைகள் :** (2.00) நடத்தூர் வ. திருமகன் தமிழ்த்
தம்பி வெளியீடு, கல்லூரி சர்ச் காம்பவுண்டு, வாணியம்பாடி ரோடு,
திருப்பத்தூர்-635 001. வ. ஆ. மா

**சித்த மருத்துவம் :** மாத இதழ், ஆசிரியர் : டாக்டர் பா. சிற்சபை
4, ராஜ வீதி, காஞ்சிபுரம்-2. தனியிதழ் ரூ 1/- ஆண்டுசந்தா ரூ11/

**சட்டமும் தொழிலாளர் :** (6-50) சோ. சேசாலம் M/s நர்மதா
பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, ரோடு, தி.நகர்,
சென்னை-600 017.

**மலை நாட்டு மக்கள் பாடல்கள் :** (7.00)
சி. கே. வேலுப்பிள்ளை, M/s கலைஞன் பதிப்பகம், 10, [illegible]
மென் ரோடு, தி.நகர், சென்னை-600 017.

**இணைந்து பாடிய இரங்கல் பாமாலை :**
(1.00) தொகுத்தவர் : மருத்துவர் மறைபாராசன், M/s காவிரி
பாவலர் மன்றம், கீடாமங்கலம்-614 404.

**நாங்கள் அறிந்த மணி ;** (4.00) தொகுப்பாசிரியர்கள் :
என். ஏ. வேலாயுதம், கொடிக்கால் செல்லப்பா, கு. சோலப்பன்
M/s கன்னியா பிரசுராலயம், 143, பாலமோர் சாலை,
நாகர்கோவில்-629 001.

*சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி :—*

**மைதிலி மோகன்,**
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053

FREE E- BOOKS , www.thamizham.net.,

பத்தாம் வகுப்பு தேறாத பதினாறு வயது நிறைந்தவர்கள் மருந்துவ உதவியாளர் பயிற்சி பெற்று விரைவில் வேலை வாய்ப்பு பெறலாம்.

உங்களது வார விடுமுறை நாட்களில் சித்த மருத்துவத்தை நேரில் கற்றுக் கொள்ளலாம்.
மற்ற முறை மருத்துவர்களுக்கு தனிப்பயிற்சி உண்டு.
விளக்கம் பெற ரிப்ளை கவருடன் எழுதுக;

வைத்தியர். மே.சி. சுப்பிரமணியம்
78 F ஜி.எஸ்.டி. சாலை,
கூடுவாஞ்சேரி. 603202.

## சு. சமுத்திரத்தின்

## சமூகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| தெருப்புத் தடாரங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9-00 |

## மணிவாசகர் நூலகம்

புத்தகம் வெளியீட்டோர், 89, லிங்கிச் செட்டித் தெரு.
சென்னை-600 001.
போன்: 512996

## சென்னைக்குப் பெருமை சேர்ப்பவை

✱ உலகத்தின் 2-வது அழகிய கடற்கரை ✱ ஆசியாவின் மிகப்பெரிய ரயில்பெட்டி தொழிற்சாலை
✱ ஆசியாவின் 2-வது பெரிய படப்பிடிப்பு நிலையம்.
அத்துடன் இந்தியாவின் மிகச்சிறந்த போஸ்டர் அச்செழுத்து தயாரிப்பாளர்கள்—

## ரங்கா டைப் பௌண்ட்ரி

சென்னையில் எல்லாவித அச்செழுத்துக்கள், அச்சக உபகரணங்கள் [illegible] இடம் இது தான் தொடர்பு கொள்க :- 7[illegible], [illegible] சாலை, வேப்பேரி, சென்னை-112.
பேசி : 37999, 664293.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# திருத்தியமைக்கப்படாத தேவர் ஹால்

"திருச்சி மாநகரில் அரங்குக் கூடங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தக் கூடியதாக நகரின் மத்தியில் உள்ள ஒரே ஒரு அரங்கு 'தேவர் ஹால்' ஆகும். திருச்சி நகராட்சிக்கு சொந்தமான இந்த அரங்கு, அளவில் பெரியது என்பதைத் தவிர இது வேறு எதற்கும் உபயோகமற்றது என்பது மட்டுமே உண்மை!

ஊருக்கு ஒதுக்கத்தில் இருக்கக்கூடிய "பிணக் கொட்டகை" போன்ற ஒரு தகர கொட்டகையும், அதி உயரத்தில் இருந்து, "எப்போது வேண்டுமானாலும் விழுவேன்" என்ற பயமுறுத்தலுடன் ஓடிக்கொண்டிருக்கும் மின்விசிறியுமாக, மிக மட்டமான 'ஒலி அமைப்புடன்' கூடிய இந்த அரங்கில், எந்த நிகழ்ச்சியும் சரிவர காதில் விழுவதில்லை. நாடகம், இசை நிகழ்ச்சி, சொற்பொழிவு என்று எவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியாக இருந்தாலும் இந்த அரங்கின் சீர்கெட்ட தன்மையினால் அத்தனையும் கெட்டுப்போவதுண்டு.

ஆனால் அதே நேரத்தில், திருச்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மூலைக்கு மூலை A/C செய்யப்பட்ட பல தனியார் சினிமா தியேட்டர்கள் உருவாகி இருப்பதைக் காணும்போது, கூட்டம், நாடகம் நடத்த ஒரு நல்ல அரங்கு நமக்குத் தேவைப்படுவதை நாம் உணரவேண்டியிருக்கிறது.

போன நூற்றாண்டுக் கட்டிடக் கலைக்குச் சான்றாக வேண்டுமானால் இந்த அரங்கத்தை விட்டு வைக்கலாமே தவிர, வேறு எதன் பொருட்டும் இந்த அரங்கு இப்படியே இருப்பதில் அர்த்தமில்லை.

எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் இந்த அவையின் அவலத்தினால் வீணாகி இருப்பதை திருச்சிவாசிகள் வேதனையோடு அனுபவித்து வந்திருக்கின்றனர்.

இந்த அவலத்தில் இருந்து விடுபடும் விதமாக ஒரு நல்ல அரங்கு அமைப்பதற்கு திருச்சி நகராட்சி முன்வருமா?"

M. சுரேந்திரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆகா! தேர்தல் முடிந்து விட்டதா? அப்பாடி!

# இனியாவது நாடு உருப்பட இதோ வழிகள்:-

- பொருளாதார, சமூக, அரசியல் என அடிப்படை அலகுகள் மூன்றிலும் 37 ஆண்டுகள் ஆகியும் குறிப்பிடத்தக்க எதனையும் இதுவரை சாதிக்காத 'இந்திய அரசியல் சாசனத்தைத் தூக்கி எறிந்து விட்டுப் புதிய அரசியல் சாசனத்தை உடனடியாக உருவாக்க வழி செய்தல்.

- அவ்வாறு உருவாக்கும் போது, ஏழ்மையில் இருந்து, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் வளர்ந்து மகத்தான சாதனை புரிந்துவரும் ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், சீனா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் அரசியல் சாசனத்தைத் துணையாகக் கொண்டு இந்தியத் தன்மை இழைந்த ஒர் அரசியல் சாசனத்தை வரைதல்.

- இந்தியன் ஒவ்வொருவனுக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக உண்ணப் போதிய உணவு, உடுக்க உடை, இருக்க இடம், பணி செய்ய ஒரு வேலை ஆகிய நான்கும் கிடைத்தே தீர வேண்டும் என்ற நோக்கில் குறு வட்டத் தொழிற்பேட்டைகளை வட்டந்தோறும் தொடங்குதல்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

● அதற்கேற்றக, ஜனாதிபதி, துணைஜனாதிபதி, ஆளுநர், மாநிலத்திலும், மையத்திலும் இரட்டை யிட்டிருக்கும் இரு கல்வி அமைச்சர்கள் போன்று ஒன்று மாநிலத்திற்கும், மற்றொன்று மையத்திற்கும் என அமைந்திருக்கும் அனைத்-து இரட்டை அமைச்சுகளில், மாநிலத்தில் இருப்பவற்றை, அல்லது மையத்தில் இருப்ப வற்றை ஒழித்து விடுதல்.

● ஐந்து ஆண்டுகளுக்கு அமைச்சர், எம்.பி.; எம்.எல்.ஏ. ஆகியோர் பொது மக்கள் வரிச் செலவில் 'உலக உலா' வருவதை, அமெரிக்க மருத்துவம் பார்த்துக் கொள் வதை முற்றுமாகத் தடை செய்தல். இது போன்ற வீண் கௌரவ ஆடம்பர ஆசியாட் -காமன் வெல்த் செலவுகள் அனைத்தையும் தொழில் பேட்டை அமைப்பதில் திசை திருப்புதல்.

● அயல் நாட்டுப் பொருள்களை வாங்கு-வது- விற்பது - அணிவது எதுவாயினும் சட்டப்படி குற்றமாக்கப்படல்.

● இந்திய ராணுவம் முழுவதையும் அப்படியே ஈடுபடுத்தி, 10 ஆண்டுகளுக்குள், பணி முடிந்து தீரும் வண்ணம் கங்கை-காவிரி இணைப்பை அமைத்தே தீருதல்.

(வளரும்) — விதைப்பூட்டு

FREE E- BOOKS , www.thamizham.net.,



# காபி

காலையில் எழுந்ததும் ஒரு 'கப்' கா:பி குடிக்கா விட்டால், எத்தனையோ பேருக்கு உலகமே இருண்டு விட்டாற்போலாகி விடுகிறது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்னால் நம் முன்னோர்கள் காலையில் இரவுச் சோற்றிலிட்ட நீரையே பருகி வந்தார்கள், சிலர் கொத்தமல்லி விதையை வறுத்து பொடிச் செய்து பாலுடனும் கருப்பட்டியுடனும் சேர்த்துப் பருகினார்கள். அந்த இடத்தை எப்படியோ கா:பி வந்து பிடித்துக் கொண்டு விட்டது. அன்றே நம் ஆரோக்யத்திற்கும் கிரகணம் பிடித்து விட்டது எனலாம்.

காபி பருகுவது என்பது 'காபின்' என்ற லாகிரி நச்சை பழக்கப்படுத்திக் கொள்வதேயாகும்.

"காபின் மிக சக்தி வாய்ந்த கொடிய நச்சுப் பொருள். அது உங்கள் மத்திய நரம்பு மண்டலம், இதய ரத்தப்பாய்வு, கபால வாயுப்புற வழிகள், ரத்த நாளங்கள் தசை இழுவிசை ஆகியவற்றைப் பாதிக்கிறது. தேனீர், காபி, கோலா ஆகிய பானங்களில் மிகப் பரவலாக இந்த காபின் அடங்கி இருக்கிறது.

நீங்கள் ஆண் என்றால் காபின் உங்கள் ஆண்மையை அழித்துவிடும். பெண்ணானால் கோளாறுகளுடன் கூடிய குழந்தைகள் பிறக்கும். காப் பருகுபவர்களுககு 72 சதம் குடல் புண் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

பெண்களுக்கு ஏற்படும் மார்பக கழலை (புற்று) நோய் 'காபின்' பழககத்தை நிறுத்திவிட்டால் பூரணமாக குணமாகி விடுகிறது.

சமீபத்தில் இன்னொரு ஆராயுச்சியில் காபினுக்கும் புற்று நோய்க்கும் தொடர்பு இருக்கிறது என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதிகாலை வேளைதான் உங்களுக்கு காபி பருகும் காலம் என்றால், அந்த நேரத்தில் படுக்கையை விட்டு

FREE E- BOOKS , www.thamizham.net.,

எழுந்திருக்காதீர்கள். சிறிது நேரம் கழித்து கண் விழித்து எழுங்கள். காபி பருகும் நேரத்தை இப்படித் தாண்டக் கற்று கொள்ள வேண்டும்.

காபியை விட முயற்சிப்பவர்கள், அதற்கு மாற்றாக வேறொரு பானத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சமீபத்தில் அமெரிக்காவில் 'காபின்' பழக்கத்தை விட்ட பலர் அதற்கு மாற்றாக பலவித மூலிகைப் பானங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். காபிக்கு மாற்றாக மூலிகைகள், கொத்த மல்லி, சுக்கு, போன்று பலவற்றைச் சொல்லலாம். இவை எல்லாப் பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கின்றன.

காபியைக் குறைக்க விரும்புகிறவர்கள், அந்த நினைவே வராதிருப்பதற்காக 'பொழுது போக்கும் தந்திரம்' ஒன்றைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

உதாரணமாகவே காபிப் பைத்தியமாகவே ஆகிவிட்ட ஒரு கல்லூரி மாணவி 'காபி'யை மறக்கடிக்க ஒரு நாளைக்கு இருபது மணி நேரமும் 'யோகாப்பியாசம்' செய்யத் தொடங்கினாள். அது நல்ல பயனளித்தது.

'காபி' பருகவேண்டும் என்று தோன்றுகிறபோது நீங்கள் உடனே வெளியில் உலாவ கிளம்பிவிட வேண்டும். மைதானத்தைச் சுற்றி ஓடலாம். அல்லது விருப்பமான ஏதாவது உடற்பயிற்சியை வீட்டினுள்ளே செய்ய ஆரம்பிக்கலாம். இவை எல்லாமே உங்கள் 'காபி' நினைப்பை மாற்ற உதவி புரியும்.

வேலையில் சுறுசுறுப்பாக மூழ்குவதும் காபியை மறக்கடிக்க உதவுகிறது. நீங்கள் பெண்ணானால், காபி நினைவு வரும்போது பின்னல் வேலைகளிலோ கைவினைப் பொருள்கள் தயாரிப்பிலோ ஈடுபடலாம்.

(மூலம் : 'எவின்மஜா'—'ப்ரவின்ஷன்' ஆங்கிலஇதழ்
ஆகஸ்ட், 1982)

ஒரு நாளைக்கு ஒருவர் ஐந்து அல்லது அதற்கும் அதிகக் கோப்பை காபி பருகினால் அதாவது சுமார் 500 மில்லிகிராம் அளவுக்கு அதிகமாகி விட்டால் நீங்கள் "காபிக்கு" அடிமையாகி விட்டதாக அர்த்தம். அதன் பின் காபியை விடவே உங்களால் முடியாது. இந்த நிலைக்கு வந்து விட்டவர்களுக்கு விரைவிலேயே இதன் பின் விளைவாக நரம்புத் தளர்ச்சி, பயம்; எரிச்சல், ஆத்திரம், தலைவலி, தசைப்பிடிப்பு, வேகமாக இதயத்துடிப்பு முதலியவை எல்லாம் ஏற்பட ஆரம்பித்துவிடுகிறது.

நன்றி : 'ஓம் சக்தி'

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

# போபால் படிப்பினை



விவசாயிகளின் நண்பன் என்பபடும் செவின், செவிமால், பாலிடால் போன்ற பயங்கர விஷமாகிய பூச்சி கொல்லிகளைத் தயாரிப்பதற்கு மெதில் ஐஸோ ஸைனைட் (M. I. C) தேவைபடுகிறது. இந்த 'மெஐஸை' யைத் தயாரிப்பதற்கு அமெரிக்காவிலுள்ள யூனியன் கார்பைட் நிறுவனத்திடமிருந்து ஆல்பா நாப்தால் தங்கு தடையின்றி வர வேண்டும். இது தேவைப்பட்ட போது கிடைக்காத காரணத்தால் தான் மெஐஸையை நிறைய சேமித்தாக வேண்டி வருகிறது. இதைச் சேமிக்க மூன்று டாங்கர்கள் இருந்தும் ஒரே டாங்கரில் தேக்கப்பட்டதேன் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. மேலும் சில காலமாகவே இந்தத் தொழிற்சாலையில் புகை போக்கி இல்லையென்பது அதிர்ச்சிக்குரியது. மெஐஸை இருக்கும் டாங்கர்களின் நிலையை கம்ப்யூடர்களின் மூலமாகக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் முறைகளை அமெரிக்கத் தொழிற்சாலை கையாண்டு வரும்போது, அது ஏன் போபாலில் வைக்கப் படவில்லை என்பது கேள்விக்குரியது.

இத்தகைய பயங்கர விஷப்பொருள்களைத் தயாரிக்கும் மாபெரும் பொறுப்பினை, கடமை உணர்வும் பொறுப்பும் பெரும்பாலும் இல்லாமல் ஏனோ தானோ என்று பணியாற்றும் நம்மவரிடம் விட்டது தவறு என்று அந்நியர் கருதினால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இனி விஞ்ஞானிகள் பூச்சிகளைக் கொல்வதற்கு மிக பயங்கரமான விஷங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதே நல்லது. ஏனென்றால் இந்தக் கொடிய விஷங்கள் கிருமிகளை நிரந்தரமாக அழிப்பதில்லை. பாலிடாலைத் தின்ற நண்டும் மீனும் சாகவில்லை. ஆனால் இந்தப் பிராணிகளைத் தின்ற மனிதன் இறந்து போனான். இது அண்மையில் கர்நாடக கிராமத்தில் நடந்தது. போபால் தொழிற்சாலையைச் சுற்றிலும் கொசுத் தொந்தரவு அப்படியேதான்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இருக்கிறதாம். எனவே இனி மனிதர்களுக்குக் கிடைக்காத அளவுக்குப் புகையிலை, காபி, கஞ்சா போன்ற தாவரங்களைப் பறி முதல் செய்து அவற்றின் விஷங்களையாவது, பாம்பு, தேள் போன்ற விலங்குலக விஷங்களையாவது பயன் படுத்தும் முறைகளைக் கண்டுபிடிப்பார்களா?

ஏறத்தாழ 3000 மனிதர்களையும் பல்லாயிரம் ஆடு மாடுகளையும் போபாலில் பறி கொடுத்த பிறகாவது நாம் நல்ல படிப்பினையைக் கற்றுக் கொள்ள வேண்டாமா?

—ஆசிரியர் குழு

## சுட்டி சிறுகதை போட்டி

சுட்டியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு உள்ள அன்பார்ந்த வாசகர்களே! கடந்த 46 மாதங்களாகத் தமிழ்ப் பத்திரிகை வானில் தோன்றி அத்தமித்துப் போகும் வால் நட்சத்திரங்களைப் போலல்லாமல் துருவ நட்சத்திரமாய், அந்தக் காலத்து மணிக்கொடி, பூச்செண்டு போல ஆழமான ஓர் பாதிப்பினை ஏற்படுத்தித் தனக்கென வாசகர் மத்தியில் ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டு வளர்ந்துள்ள சுட்டியின் வாசகர்களுக்கு இதோ ஓர் இனிப்பான செய்தி.

சிறப்பு அம்சங்கள் பல கொண்ட சுட்டியின் 50 ஆவது மாத இதழை ஒட்டி ஒரு சிறு கதைப் போட்டி இருக்கிறது. உங்கள் சிறு கதை சுட்டியின் ஒரு பக்க அளவில் 'சுருக்' என்று உள்ளத்தைத் தொடும்படியாக இருக்க வேண்டும் என்பதை நீங்களே அறிவீர்கள். தேர்ந்தெடுக்கப்படும் எல்லாச் சிறுகதைகளும் தொடர்ந்து சுட்டியில் வெளியாகும். ஆசிரியர் குழுவின் முடிவின் படி சிறந்த பரிசுகளும் அளிக்கப்படும். அனுப்ப வேண்டிய இறுதிநாள் : 31-1-1985

—ஆசிரியர் குழு

சென்ற இதழில் அறிவித்தபடி சுட்டியின் புதிய விலை 60 காசு. ஆண்டுச் சந்தா ரூ 7/- என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# சென்னை சபாக்கள் சிந்திக்குமா?

சென்னை மாநகரிலுள்ள ஏராளமான சபாக்கள், கலா ரசிகர்களுக்கும் நாடகப் பிரியர்களுக்கும் சங்கீத பக்த கோடிகளுக்கும் நிறைய செமை தீனி போட்டு நன்கு வளர்த்து வந்துள்ளன. இந்த எல்லா சபாக்களும் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து இந்த டிசம்பர் ஜனவரி மாதங்களி லேயே தங்கள் ஆண்டு விழாக்களையும் இசை விழாக்களை யும் நடத்துகின்றன.




குறிப்பாக :

மியூசிக் அகடமி
ஸ்ரீ கிருஷ்ண கான சபா
மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்
இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைடி
தமிழ் இசைச் சிங்கம்
கலா க்ஷேத்ரா
வழுவூரார் நாட்டிய விழா

அற்புதமான இசை நடன நிகழ்ச்சிகளை ஒரே நாளில் எல்லா சபாக்களும் வைத்துக் கொண்டுள்ளன. சங்கீதா சிலர்களுக்கு எதை விடுவது எதை ரசிப்பது என்று தெரியாத நிலையில் குழம்பிப் போய்க் கிடக்கிறார்கள். உதாரணமாக 25-12-84 அன்று ஒரிடத்தில் ஜேசுதாஸ் கச்சேரி அந்த சமயம் வேறொரு சபாவில் ஸ்வர்ணமுகியின் நடனம்; பிறிதோர் சபாவில் ரமணி புல்லாங்குழல்; இன்னும் வேறு வேறு சபாக்களில் டாக்டர் ராமநாதன் சங்கீதம், லால்குடி ஜயராமன் வயலின்.

இந்த இடத்தில் சென்னை சபாக்கள் கீழ்வருமாறு செய்யலாம், இவை தங்களுக்குள் ஒற்றுமையாக அமர்ந்து பேசி முடித்து தங்கள் ஆண்டு விழாக்களை வெவ்வேறு மாதங்களில் நடத்துவார்களேயானால், எல்லாரும் எல்லா நிகழ்ச்சிகளையும் ரசிக்கலாம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன். 1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிடுவோர்: ஜே.எஸ். கிட்ராஸ் ஷா, இருதா பிரிண்டர்ஸ், 96, சாமி தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஜூட் மாத இதழ் I ஜூன் - 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WP -58

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children, (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E-BOOKS , www.thamizham.net.,